DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
------
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | |
|---|---|
| Calender | |
| Miscellaneous<br>Priliminary Register | Case No. CC 17/2020 |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
| Name | பாண்டியராஜன் |
| Father's Name | முத்தையா |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **5.1.2021**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் செங்குளத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு அத்தாட்சிகளில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். நான் வேலை பார்த்த செங்குளம் கிராமத்தில் ஜாய் ரெக்கிரேசன் கிளப் உள்ளது. அங்கு என்னை மதுவிலக்கு போலீசார் வரசொன்னதன் பேரில் 17.10.17 அன்று காலை 10.45 மணியளவில் நானும் என்னுடைய கிராம உதவியாளர் முருகன் என்பவரும் சென்றோம். நாங்கள்

சென்றபோது மேற்படி கிளப்பில் இரந்த மதுபாட்டில்களை போலீசார் பாதி பாட்டில்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். நான் ஆய்வாளரிடம் கேட்டபோது எங்களை அத்தாட்சிக்காக கூப்பிட்டுள்ளோம். இந்த பாரில் உள்ள பாட்டில்களை கைப்பற்றுவதற்காக உங்களை கூப்பிட்டோம் என்று கூறினார். 11 மணிக்கு திறக்க வேண்டிய பாரினை 10.30 மணிக்கு திறந்ததால் மேற்படி பாட்டில்களை கைப்பற்றுகிறோம் என்று கூறினார்கள். மேற்படி அத்தாட்சியில் 26 வகையான மதுபான பாட்டில்கள், ரூ.2303 பணத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். மேற்படி அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து போட்டோம். இரண்டு அத்தாட்சிகள் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆகும். மேற்படி பணம் சா.பொ.1 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

என்னை மதுவிலக்கு காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசியில் அழைத்தார். என்னை அழைத்தபோது 10.45 மணியிருக்கும். அலுவலகத்தில் நானும் கிராம உதவியாளரும் இருந்தோம். போலீசார் அழைத்தால் அவர்கள் அழைத்த வேலை முடிந்தவுடன் தாசில்தார் அவர்களிடம் தகவல் கொடுக்கவேண்டும். 1 மணிக்கு நான் தாசில்தாருக்கு தகவல் கொடுத்தேன். 11.30 மணிக்கு போலீசார் எதற்கு அழைத்தார்கள் என தாசில்தாரிடம் விவரம் சொன்னேன். 1 மணிக்கு பணியை முடித்துவிட்டு மீண்டும் தாசில்தாருக்கும் தகவல் சொன்னேன். ஜாய் ரெக்கியேசன் கிளப் மட்டும் தான் உள்ளது. ஜாய் பார் கிடையாது. சுமார் 10.55 மணிக்கு அங்கு சென்று சேர்ந்தேன். நான் போகும்போது 20 அட்டை பெட்டிகளை போலீசார் கம்பவுண்டுக்குள் டேபிள் சேர் அருகே அடுக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் அடுக்கி வைத்திருந்த பாட்டில்கள் என்னென்ன வகை என்று எனக்கு தெரியாது. நாங்கள் வந்தபிறகு ரேக்கில் இருந்ததை எடுத்தார்கள். நான் போன பிறகு எத்தனை அட்டை பெட்டிகள் எடுத்தார்கள் என்ற கணக்கு எனக்கு தெரியாது. ரேக்கில் எடுத்த பாட்டில்களை தவிர மற்ற அனைத்து பாட்டில்களும் அட்டைபெட்டியில் தான் இருந்தது. அது எத்தனை அட்டை பெட்டி என்று கணக்கு சொல்லஇயலாது. என்னென்ன வகை பாட்டில்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் பேப்பரில் என் முன்னாடி சொல்லி சொல்லி எழுதினார்கள். ஆய்வாளர் கூட இருந்தார். இது அனைத்தும் நடந்தது ஜாய் ரெக்கியேசன் கிளப் உள்ளே தான். நான்கு ரூம்கள் உள்ளது. ரூபாயில் வகைகள் எனக்கு தெரியாது. எத்தனை 50ரூபாய்கள் எத்தனை 20 ரூபாய்கள் என்று எனக்கு தெரியாது. 5 போலிசார்

இருந்தார்கள். ஆய்வாளர் ஒருவர். வெளி நபர்கள் யாரும் இல்லை. பணத்தை லாக்கரில் இருந்து எடுத்தார்கள். 1 லாக்கரில் இருந்து பணம் எடுத்தார்கள். சாவி போட்டுதான் லாக்கரை திறந்தார்கள். அந்த சாவியை யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் சொல்லிதான் இத்தனை மணிக்கு திறக்கவேண்டிய பார் இத்தனை மணிக்கு திறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் போகும்போது மதுபானம் விற்பதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அதற்கு ஒரு அறையும் இன்னொரு அறையில் ஸ்நான்க்ஸ் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். மதுபானம் விற்பதற்கு ஆயத்தம் செய்துக்கொண்டிருந்த இடத்தில் தான் மதுபாட்டில்களை போலீசார் எடுத்தார்கள். அட்டை பெட்டிகள் 20ல் நான் போவதற்கு முன்பே எடுத்து வைத்திருந்தர்கள் என்றும் மீதியை நான் போன பின்பு எடுத்தார்கள் என்றும் பாதி பாட்டில்கள் ரேக்கிலிருந்து எடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் சொல்வது போல் எந்தவொரு அத்தாட்சியும் தயார் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் ஒரு அரசாங்க ஊழியர் என்பதால் போலீசார் கூறியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.